https://t.me/tnpscfree

# இடைக்கால இந்தியா
# (கி.பி.112 முதல் கி.பி.1707)

## அரேபியர்கள்:-

- இஸ்லாம் மதத்தை தோற்றுவித்தவர் - முகமது நபி (கி.பி. 570-632)
- முதன் முதலில் இஸ்லாமிய மதத்தை பின்பற்றியவர்கள் அரேபியர்கள்
- இஸ்லாமியர்களை வலிமைமிக்க அரசியல் இயக்கமாக ஆசியாவில் நிலைநிறுத்தியவர்கள் அரேபியர்கள்

## சிந்து, முல்தான் படையெடுப்பு : கி.பி. 712

- அரேபிய படையெடுப்புக்கு முன் இந்தியாவில் முஸ்லீம்கள் கேரளக் கடற்கரையோரம் வியாபாரத் தொடர்பு கொண்டிருந்தனர்.
- **சிந்து மன்னர் -தாகீர்** - முஸ்லீம் வணிகத்தை தடுத்தார்.
- இதனால் ஈராக் ஆளுநர் அல்ஷாஜாஜ், கலீபா வாலத் அனுமதியுடன் தனது மருமகன் முகமது பின் காசிமை சிந்து மீது படையெடுக்க அனுப்பினார்.

## ரேவார் போர்:-

- சிந்துவின் மன்னர் **தாகீர் - முகமது பின் காசிமிடையே** நடைபெற்றது.
- முகமது பின் காசிம் வெற்றி பெற்றார். முல்தான் நகரமும் கைப்பற்றப்பட்டது.
- முல்தானை **"தங்கநகரம்"** என அழைத்தார்.
- நிர்வாகம் :- சிந்து , முல்தான் மாவட்டங்கள் எனப்படும் இக்தார்களால் பிரிக்கப்பட்டது.
- முஸ்லிம் அல்லாதோர் மீது **ஜிசியா வரி** விதிக்கப்பட்டது.

## விளைவுகள்

- **பிரம்மகுப்தர் எழுதிய பிரம்மசித்தாந்தம்** என்ற சமஸ்கிருத நூலானது அரபு மொழியில் மொழிபெயர்க்கப்பட்டது.
- அரேபிய நூல்களில் இந்திய அறிவியலாளர்களான பஹலா, மானகா, சிந்துபாத் ஆகியோர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.
- பாக்தாத் நகரின் மருத்துவமனையில் தலைமை மருத்துவராக தாணா என்ற இந்தியர் நியமிக்கப்பட்டிருந்தார்.

# துருக்கியர் படையெடுப்பு
### முகமது கஜினி

- காஸ்னா நகரில் பிறந்தவர்.
- தந்தை —— சபக்டிஜின் - அடிமை இராணுவ வீரர் - பின்னர் கஜினியின் மன்னரானார்.
- சபக்டிஜினிக்கு பிறகு இஸ்மாயில் என்பவர் ஆட்சி புரிந்தார்.
- இஸ்மாயிலை அரசப்பதவியிலிருந்து நீக்கி அப்பதவியில் அமர்ந்தார்.
- கலீபா இவரது ஆட்சியை அங்கீகரித்து **"யாமின் உத்தெளலா"** என்ற பட்டத்தை வழங்கி சிறப்பித்தார்.
- ஆகவே, முகமது கஜினியும் அவரது வாரிசுகளும் **"யாமினிகள்"** எனவும் **"யாமினி வம்சம்"** எனவும் அழைக்கப்படுகிறது.
- 17 **முறை இந்தியாவின் மீது படையெடுத்தார்.**
- முக்கிய படையெடுப்பு - 1025 ல் நடந்த **சோமநாதபுரம்** (கத்தியவார் தீபகற்பத்தில் உள்ளது) படையெடுப்பாகும்.

Dept. of Employment



Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

Join Telegram Channel :

@tnpscfree

https://t.me/sasiclasses



https://t.me/tnpscfree

- ❖ அப்பகுதியை ஆண்ட மன்னன் - இராஜ பீம தேவன்.
- ❖ கஜினியுடன் இந்தியாவிற்கு வந்த **புகழ்பெற்ற கவிஞர் அல்பெருனி** —— எழுதிய புத்தகம் - **"தகிக்-இ-இந்த்"**

**புலவர்கள் :-**

1. உட்பி —— "கிதாப்-உல்-இந்த்"
2. பிர்தௌசி —— "ஷா நாமா"

**தோற்கடிக்கப்பட்ட அரசர்கள் :-**

1. சாஹி மரபைச் சார்ந்த ஜெயபாலர்
2. முல்தான் அரசர் - பதோவூக்

## முகம்மது கோரி (1178)

- ❖ துருக்கியின் கோரி ஹிரட்டுக்கும், கஜினிக்கும் இடையேயான மலைப்பகுதி.
- ❖ முதல் படையெடுப்பில் கி.பி.1176 ல் முல்தான் கைப்பற்றினார்.
- ❖ கி.பி.1182 ல் சிந்துவை கைப்பற்றினார்
- ❖ கி.பி.1185 ல் பஞ்சாப்பை வென்று சிபில் கோட்டை கைப்பற்றினார்.
- ❖ கி.பி.1186 ல் லாகூர் கைப்பற்றப்பட்டது.

**முதல் தரையன் போர்**

- ❖ **கோரிக்கும், பிருத்திவிராஜ் சவுகான்**-க்கும் இடையில் நடைபெற்றது. இதில் சவுகான் வெற்றி பெற்றார்.

**இரண்டாம் தரையன் போர்:கி.பி. 1192**

- ❖ கோரிக்கும் பிருத்திவிராஜ் சவுகான்-க்கும் இடையில் நடைபெற்றது. இதில் **கோரி வெற்றியடைந்தார்.** காரணம் மற்ற மன்னர்களின் ஒத்துழைப்பு கிடைக்கவில்லை.
- ❖ சவுகான், சம்யுக்தா என்ற இளவரசியை சுயம்வரத்தின் போது கடத்தி சென்று திருமணம் செய்து கொண்டார்.
- ❖ இதனால் ஜெயச்சந்திரன் என்ற இந்திய மன்னர் கோரிக்கு உதவி செய்தார்.
- ❖ சந்த் பர்தாய் என்பவர் பிருத்திவிராஜ் சவுகானின் அவைப்புலவர்.
- ❖ 1197-ல் **சந்தேவார் போர்** - கோரிக்கும், இராஜபுத்திர அரசர் ஜெயசந்திரனுக்கும் இடையில் நடைபெற்றது. ஜெயசந்திரன் கொல்லப்பட்டார். ஜெயசந்திரன் சவுகானின் மாமனார் ஆகும்.

**வங்காளம் பீகார் படையெடுப்பு :-**

- ❖ கோரியின் தளபதி முகம்மது பின் பக்தியார் கில்ஜி. வங்காளத்தின் மீது படையெடுத்தார். (கி.பி.1202-1203) படையெடுப்பின் போது **விக்கிரமசீலா நாளந்தா பல்லைகழகத்தை தாக்கி அழித்தார்.**



Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

- ❖ வங்காளத்தில் நபியா பகுதி மற்றும் பீகாரை கைப்பற்றினார்.
- ❖ இந்தியாவில் முஸ்லீம்கள் குடியேற அடித்தளமிட்டவர் முகம்மது கோரி.
- ❖ ஆப்கானில் ஏற்பட்ட கலவரத்தை அடக்க கோரி ஆப்கன் திரும்பும்போது 25-03-1206 பஞ்சாபில் "கொக்கார்" என்ற பழங்குழயினத்தவரால் கொல்லப்பட்டார்.
- ❖ கோரி ஆப்கன் திரும்பும்போது தனது இந்திய ஆட்சிப் பகுதியை நிர்வாகம் செய்ய தனது அடிமையான **குத்புதீன் ஐபக்** என்பவரை **நியமித்**தார். இவரே அடிமை வம்சத்தை நிறுவியர்.

**டெல்லி சுல்தான்கள்:- (1206-1526)**

(கோரிக்குபின் டெல்லியை ஆண்ட முஸ்லிம் மன்னர்கள் "சுல்தான்கள்" எனப்பட்டனர்)

1. அடிமை வம்சம் - கி.பி. 1206-1290
2. கில்ஜி வம்சம் - கி.பி. 1290-1320
3. துக்ளக் வம்சம் - கி.பி. 1320-1414
4. சையத் வம்சம் - கி.பி. 1414-1451
5. லோடி வம்சம் - கி.பி. 1451-1526

**அடிமை வம்சம் (அ) மாம்லுக் வம்சம்**

**குத்புதின் ஐபக் (1206-1210)**

- ❖ அடிமை (அ) மாம்லுக் வம்சத்தை நிறுவியவர்.
- ❖ சுல்தான் ஆட்சியை நிறுவியவர்.
- ❖ தலைநகர் - முதலில் லாகூர் (டில்லி சுல்தான்களின் தலைநகரம் - லாகூர்). பின்னர் டில்லி.
- ❖ இவர் ஐபெக் (அ) குத்பி மரபை சார்ந்தவர்.
- ❖ குதுப் - உத் - தீன் ஐபெக் போலோ (சவுகன்) விளையாட்டின் போது குதிரை மீது இருந்து தவறி விழுந்து கிபி. 1210-ல் மறைந்தார்.
- ❖ இவர் **லாக்பக் ஷா** எனப்பட்டார்.
- ❖ **இவர் அஜ்மீரில் குவாவத்துல் இஸ்லாம் மசூதி மற்றும் அதாய் தின்கா ஜோன்பூர் மசூதியையும், டில்லியில் தாய்புன்கா - ஜோன்பரா என்ற மசூதியையும் கட்டினார்.**
- ❖ **குதுப்மினார்**, கட்டுமான பணிகளை தொடங்கினார். இது **குவாஜா குதுப்பின் பக்தீயார் காஜி** என்ற சூபி துறவியின் நினைவாக கட்டப்பட்டது.

**ஆரம் கான்ஷா - 1210**



Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

- ❖ ஐபக்கின் பின் ஆட்சிக்கு வந்தவர். (ஐபக்கின் மகன் எனக் கருதப்படுகிறார்). இவர் இல்துமிஷ்-ஆல் கொல்லப்பட்டார்.

**இல்துமிஷ் (1210-1236)**

- ❖ **அடிமையின் அடிமை** எனப்பட்டார்.
- ❖ மத்திய ஆசியாவில் வாழ்ந்த இல்பாரி என்ற பழங்குடி இனத்தை சார்ந்தவர்.
- ❖ ***"இக்தா"*** முறை-தளபதிகளுக்கு சம்பளத்திற்கு பதிலாக நிலத்தை வழங்குதல்
- ❖ ***"டங்கா"*** என்ற வெள்ளி நாணயத்தையும், ***ஜிடால்*** என்ற தாமிர நாணயத்தையும் வெளியிட்டார்.
- ❖ குதுப்மினாரை கட்டி முடித்தார்.
- ❖ மங்கோலிய மன்னர் செங்கிஸ்கானின் படையெடுப்பிலிருந்து டெல்லியை பாதுகாத்தார்.
- ❖ இறக்கும்போது மகள் ரசியா பேகத்தை வாரிசாக அறிவித்தார்.
- ❖ இல்துத்மிஷின் மகன்கள் மற்றும் மகள்கள் - ருக்னுதீன், ரஸியா பேகம், பஹ்ரம், அலாவுதீன் ஆலம்.
- ❖ ***"நாற்பதின்மார் குழு"*** எனும் திறமையான அதிகாரமிக்க நிர்வாக குழுவை வைத்திருந்தார்.

**ருக்னுதீன் பெர்ரோஸா :-**

- ❖ இல்துத்மிஷின் மறைவிற்கு பிறகு ருக்னுதீன் 7 மாதங்கள் ஆட்சி செய்தார். பிறகு "நாற்பதின்மார் குழு" ரஸியா பேகத்தை அரசியாக அறிவித்தது.

**ரஸியா பேகம் (1236-1240):-**

- ❖ டில்லியை ஆட்சி செய்த ஒரே மற்றும் முதல் பெண் சுல்தான். இவரின் பாதுகாவலர் "ஜலாலுதின் யாகூப்" (அபிசீனிய நாட்டு அடிமை - தற்போதைய எத்யோப்பியா)
- ❖ ரஸியாவின் அமைச்சர் அல்துனியா புரட்சி செய்தார்.
- ❖ இதில் ரஸியா கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டார். பிறகு அல்துனியாவையே திருமணம் செய்து டெல்லிக்கு திரும்பும்போது புரட்சியாளர்கள் இருவரையும் கொன்று விட்டனர்.

**பக்ரம் ஸா (கி.பி. 1240 - 42):-**

- ❖ அதிகாரம் மிகுந்த நாற்பதின்மர் சுல்தானை எதிர்த்து கலகம் செய்தனர். இவரின் ஆட்சி காலத்தில் தான் மங்கோலியர் படையெடுப்பு நடந்தது.

**அலாவுதீன் மசூத் (கி.பி. 1242 - 46)**



Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

- ❖ நாற்பதின்மர் குழுவில் இடம் பெற்றிருந்த பால்பன், அரசு விவகாரங்களில் அதிகம் தலையிட்டார்.
- ❖ பால்பன் நாக்பூர் ஆளுநராக நியமிக்கப்பட்டார்.

**நசிருதின் முகம்மது :- (1246-1266)**

- ❖ இல்துமிஷின் இளைய மகன்.
- ❖ இவரின் அமைச்சர் மற்றும் ஆளுநர் பால்**பன்.**
- ❖ பால்பன் இல்டுமிஷின் நாற்மதின்மர் குழுவின் ஓர் உறுப்பினராக இருந்தார். நாசிருதின் முகம்மதுவை தனது மருமகனாக்கிக் கொண்டார். சிலகாலம் கழித்து மருமகனை கொன்றுவிட்டு தானே ஆட்சி **அமைத்தார்.**

**பால்பன் (கி.பி. 1266 - 1286)**

- ❖ இவர் இல்பாரி (அ) பால்பானி மரபை சார்ந்தவர்.
- ❖ இயற்பெயர் **பாகனுதீன்**
- ❖ இல்துத்மிஸின் அடிமையாக இருந்தார்.
- ❖ **நியாபத்-இ-குதாய்** - உலகின் பிரதிநிதி
- ❖ **ஜில்-இல்லா** - கடவுளின் நிழலாக தன்னை அறிவித்துக் கொண்டார்.
- ❖ **நௌவ்ராஸ்** - பெர்சியன் புதுவருடத்தை அறிமுகப்படுத்தினார்.
- ❖ **பேபாஸ்** - மன்னரின் கால்களை தொட்டு முத்தமிடல்.
- ❖ நாற்பதின்மர் குழு ஒழிக்கப்பட்டது.
- ❖ **திவானி அர்ஸ்** - தனிப்படை துவங்கப்பட்டது.
- ❖ வங்காள ஆளுநரான துக்ரில்கான் பால்பனுக்கு எதிராகச் செயல்பட்டனர். கடைசியில் பால்பனால் சிறைப்படுத்துப்பட்டார்.
- ❖ **அமிர்குஸ்ரு (இந்திய கிளி)** என்ற புகழ் பெற்ற பாரசீகக் கவிஞரைத் தனது அவையில் வைத்துப் போற்றினார்.
- ❖ பிஸ்மில்லா-பிஸ்மில்லா —— பால்பன் வருகையை கூறும் வாசகம்.
- ❖ **அப்ரஸியா** (பெர்சியன் ஏண்சியண்ட் ஹீரோ) - தன்னை பெர்சிய புராண நாயகனான அப்ரஷ்யா-வின் வழித்தோன்றல் என அறிவித்துக் கொண்டார்.

**கைகுஸ்ரு:-**

- ❖ பால்பன் கைகுஸ்ருவை வாரிசாக நியமித்தார். ஆனால் பக்ருதீன், கைருபாத்தை அரியணையில் ஏற்றினார். இவர் நோய்வாய்படவே 3 வயதே நிரம்பிய கையுமார் என்பவரை அரியணையில் ஏற்றினர். பின் 3 மாதம் கழித்து ஜலால் - உத் - தீன் கில்ஜி இவரை கொன்றுவிட்டு அரச பதவியை அடைந்தார்.

## கில்ஜி மரபினர்

**ஜலாலுதின் கில்ஜி (1290-1296):-**

- ❖ கில்ஜி வம்சத்தை தோற்றுவித்தவர்(கருணை உள்ளம் கொண்ட ஜலாலுதின்)
- ❖ இவரின் மருமகன் அலாவுதினை அலாகாபாத்தின் கவர்னராக நியமித்தார்.



Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

- ❖ அலாவுதின் கில்ஜி-ஆல் கொல்லப்பட்டார்.
- ❖ 1926 ல் அலாவதீன் தேவகிரி மீது **படையெடுத்**தார்.
- ❖ அலகாபாத் வந்த ஜலாலுதினின் காலில் தான் விழும் பொழுது தன் படையாள் மூலம் ஜலாலுதின் தலையை துண்டிக்கச் செய்து கொன்று விட்டு டில்லியின் சுல்தானாக ஆனார்.

**அலாவுதின் கில்ஜி (1296-1316)**

- ❖ அலாவுதின் ஒரு சிறந்த **புவியியல் நிபுணர்** (Geologists)
- ❖ கில்ஜி வம்சத்தின் தலைசிறந்த மன்னர்.
- ❖ சிறந்த நிர்வாகி மற்றும் சீர்திருத்தவாதி
- ❖ **தக்** முறை - குதிரைகளை தவறான கணக்கில் காட்டும் வழக்கத்தை தடுக்க அலாவுதின் குதிரைகளுக்கும் சூடுபோடும் முறை
- ❖ நிலவரி ***பங்கு*** என இருந்தது.

**படையெடுப்புகள்:-**

1. கி.பி.1297ல் குஜராத்தைத் தாக்கினார். குஜராத் மன்னர் இராணி கமலாதேவி சிறைபிடிக்கப்பட்டார். **மாலிக்கபூர்** என்ற வீரரும் ஏராளமான செல்வங்களும் அலாவுதீனுக்கு கிடைத்தன.
2. ராந்தம்பூர் படையெடுப்பு (1296 - 1201)
3. சித்தூர் படையெடுப்பு (கி.மு. 1303)

   வெற்றிக்கு பின் சித்தூர் - கிஸ்ராபாத் என மறு பெயரிடப்பட்டது. பார்ட்ஸ் என்ற நாடோடி பாடகனின் பாடல் மூலம் சித்தூர் பற்றி அறிந்து அலாவுதின் படையெடுத்தார். ராணா ரத்தன் சிங்கை கொன்று ராணி பத்மினியை கடத்திச் சென்றார். இந்த தகவல் ஷெர்ஷா காலத்தில் வாழ்ந்த ஜெய்சி என்ற ஹிந்தி புலவர் எழுதிய பத்மாவதி என்ற நூலில் எழுதப்பட்டுள்ளது.

4. தேவகிரி படையெடுப்பு (கி.பி. 1307)
5. வாரங்கல் படையெடுப்பு (கி.பி. 1309 - 1310)
6. துவார சமுத்திரம் படையெடுப்பு (கி.பி. 1301 - 1311)
7. மதுரை படையெடுப்பு (கி.பி 1311)

பாண்டிய நாட்டில் சுந்தரபாண்டியன் மற்றும் வீரபாண்டியன் இருவரும் அரியணை ஏறுவதற்கு போட்டியிட்டனர். இதில் சுந்தரபாண்டியன் தில்லிக்கு சென்று சுல்தானிடம் வழக்கை முறையிட்டார் பின் மாலிக்கபூர் தலைமையில் படையெடுப்பு மேற்கொள்ளப்பட்டது. மாலிகபூர், இராமேஸ்வரம் வரை வந்து அங்கு ஓர் மசூதியை கட்டுவித்தார்.

- ❖ தில்லியின் இரண்டாவது நகரமான **சிரி** இவரால் அமைக்கப்பட்டது.
- ❖ **அமிர்குஸ்ரு, அமிர்ஹஸன்** போன்ற மேம்பட்ட அறிஞர்கள் அவருடைய அரசவையை அலங்கரித்தனர்.



Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

- ❖ சதி மற்றும் ஜாவ்கார் முறை பற்றி அமிர்குஸ்ரு தனது நூலில் எழுதியுள்ளார்.

**அலாவுதினின் சீர்திருத்தங்கள்:-**

1) சந்தை சீர்திருத்தங்கள்

- ❖ **திவான்-கி-மண்டி**- அரசே கடைகளை நிறுவி நடத்தியது
- ❖ குதிரைகளை தரம் பிரித்து விற்பனை செய்யும் முறை பின்பற்றப்பட்டது
- ❖ **திவான் -இ-முஸ்டக் ராஜ்** - வரிகளை வசூலிக்கும் முறை

2) படை சீர்திருத்தங்கள்.

- ❖ தாக் முறை- குதிரைகளுக்கு சூடுபோடும் முறை (அரசால் வாங்கப்பட்ட குதிரைகளை அடையாளம் காணுதல்)
- ❖ செஹ்ரா - படை வீரர்களின் விவரப் பட்டியல்
- ❖ நிரந்தர நிலப்படை திட்டம்
- ❖ நிரந்தர படையை முதன்முதலில் வைத்திருந்தவர்

**கட்டிடக்கலை :-**

- ❖ **பாமத்கானா மசூதி, அலைதர்வாஸ்** என்ற இரு படைப்புகள் மற்றும் சிரிக்கோட்டையைக் கட்டியதோடு ஆயிரம் தூண்களையும் கொண்ட அரண்மனையையும் கட்டினார்.

**குத்புதின் முபாரக் ஷா (கி.பி. 1320)**

- ❖ தேவகிரி அரசு தில்லி அரசுடன் இணைக்கப்பட்டது.

**நாசிருதீன் குஷ்ருஷா (கி.பி. 1320):-**

முதலில் இந்துவாக இருந்த இச்சுல்தான் பின்னர் முகம்மதியரானார். திபால்பூர் ஆட்சியாளரான காசிமாலிக் கீஸ்ருவைக் கொன்றார். பின் இவரே கியாசுதின் துக்ளக் என்ற பட்டத்துடன் அரியணையேற்றினார்.

## துக்ளக் வம்சம்

### கியாசுதின் துக்ளக் (1320-1325)

இயற்பெயர் : **காசிம் மாலிக்**

**துக்ளக் மரபை** தோற்றுவித்தவர்.

நிஜாமுதின் அவுலியா என்ற சூபி துறவியிடம் இருந்து பெறும் செல்வத்தை அரசாங்கத்திற்க கொணர முயற்சித்தார்.

- ❖ கி.பி. 1323ல் ஜூனாகானின் (முகம்மது பின் துக்ளக்) தலைமையில் வாரங்கலின் மீது படையெடுப்பு மேற்கொள்ளப்பட்டது.
- ❖ தில்லியில் மூன்றாவது நகரமான ***துக்ளதாபாத்*** இவரால் அமைக்கப்பட்டது.



Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

## முகம்மது பின் துக்ளக் (கி.பி. 1325 - 1351):-

**இயற்பெயர்: ஜுனாகான் பட்டபெயர்: உலுக்கான்**

**டில்லி சுல்தானாக ஆனபொழுது முடிசூட்டிக் கொண்ட பெயர்: முகம்மது பின் துக்ளக்**

- ❖ தோவாப் வரி:- (கி.பி 1325 - 27) கங்கை யமுனை இவற்றிற்கிடையே உள்ள செழிப்பான தோவாப் பகுதி மீதான வரிகளை சுல்தான் அதிகப்படுத்தினார்.
- ❖ தலைநகரை மாற்றுதல் (கி.பி. 1326-27) தேவகிரியைத் தௌலத்தாபாத் என பெயரிட்டுத் தில்லியிலிருந்து தமது தலைநகரை அங்கு மாற்றினர். திட்டம் தோல்வியடைந்து. தென்னிந்தியாவையும், வங்காளத்தையும் கட்டுபடுத்தவும் மங்கோலியப் படையெடுப்பில் இருந்து தலைநகரை பாதுகாக்கவும் தலைநகரம் மாற்றம் செய்யப்பட்டது. ஆனால் மன்னர் நினைத்ததை முழுமையாக செய்ய முடியாததால் தலைநகரம் மீண்டும் டெல்லிக்கு மாற்றப்பட்டது.
- ❖ அடையாள நாணய முறை வெளியீடு (கி.பி. 1329 - 1330). சீனாவிலும் பாரசீகத்திலும் அடையாள நாணய முறை புழக்கத்திலிருந்ததால் முகம்மதும் தம்முடைய நாணய முறையில் மாறுதலை ஏற்படுத்த விரும்பினார். இவர் செப்பு நாணயமுறையினைக் கொண்டு வந்தார். திட்டம் தோல்வியடைந்தது.
- ❖ திவான்-இ-அமிர்-இ-கொஹி விவசாயிகளுக்கு வாங்கப்பட்ட கடன்.
  - ▪ இவரது காலத்தில் ஈரான் நாட்டிலும், சீன நாட்டிலும் அறிமுகப்படுத்தப்பட்ட தாமிர நாணய முறையை இந்தியாவில் அறிமுப்படுத்தப்பட்டது. ஆனால் கள்ள நாணயங்கள் மிகுதியாக புழக்கத்தில் விடப்பட்டடதால் இந்த முறை தோல்வியடைந்தது.
- ❖ குராசான் படையெடுப்பு மற்றும் குராச்சி படையெடுப்பு ஆகியவையும் தோல்வியடைந்தன.
- ❖ **முரண்பாடுகளின் மொத்த உருவம் - முகமது பின் துக்ளக்**
- ❖ இவரின் காலத்தில் **மொராக்கொ நாட்டு பயணி இபின் படுடா** இந்தியாவிற்கு வருகை புரிந்தார்
- ❖ இவர் எழுதிய புத்தகம் - **ரெக்லா** (இந்தியாவில் எனது அனுபவங்கள்)
- ❖ முகமது பின் துக்ளக் சதி முறையை ஆதரித்தார்.

**கிளர்ச்சிகள் :-**

- ❖ மதுரையை தலைநகரமாகக் கொண்டிருந்த மாபார் மாநிலத்தின் கொத்தவலாக இருந்த **சையத் ஆயினர்** கி.பி. 1334 - 35 ல் தனியுரிமையை அறிவித்தார்.
- ❖ கி.பி. 1337ல் வங்கம் தனியுரிமையை நிலை நாட்டியது.



Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

- ❖ சுல்தானின் அடக்குமுறை நடவடிக்கைகள் கி.பி.1336-ல் விஜயநகரத்தில் இந்து பேரரசு தோன்றுவதற்குக் கால்கோளிப்பட்டது.
- ❖ 1347-ல் பாமினி அரசு தோற்றுவிக்கப்பட்டது.
- ❖ முகம்மது மறைவை குறிப்பிடுகையில் மக்களிடமிருந்து அரசருக்கு விடுதலை கிடைத்தது, அரசரிடமிருந்து மக்களுக்கு விடுதலை கிடைத்தது என்றார் பதௌனி.

**பெரோஷா துக்ளக் (1351-1388):-**

முகம்மது மகனின்றி இறந்ததால் உயர்குடி மக்கள் பிரோஸிற்கு அரியணையை **அளித்தனர். கி.**பி. 1351ல் தட்பாவில் தில்லி சுல்தானாக அவர் அறிவிக்கப்பட்டார்.

- ❖ ஆட்சித்துறை சீர்த்திருத்தத்தில் இவருக்குதவியாக தலைமையமைச்சர் கான் - இ - ஜஹான் மாக்பால் பணியாற்றினர்.
- ❖ நான்கு வகையான வரிகள்.
- கராஜ் - பத்தில் ஒரு பங்கு (நிலவரி)
- காம்ஸ்- ஐந்தில் ஒரு பங்கு (போரில் கைப்பற்றப்பட்ட பொருள்கள்)
- ஜிஸியா - முஸ்லிம் அல்லாதார் மீதான தலைவரி இதுகாறும் விலக்களிக்கப்பட்டிருந்த பிராமணர்கள் மீது முதல்தடவையாக ஜிஸியா வரியை விதித்தார்.
- ஸாகத் - முஸ்லிம்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட வரி
- ❖ 5 பெரிய பாசனக்கால்வாய்களை வெட்டினார். 150 கிணறுகளையும் 50 அணைகளையும் கட்டுவித்தார்.
- ❖ **பிரோஸ்பாத், பதேஹபாத், ஜான்பூர், ஹஸ்ஸார்** போன்ற நகரங்களை அமைத்தார்.
- ❖ மீரட்டிலிருந்தும் தோப்ராவிலிருந்தும் அசோகருடைய கற்றூண்கள் இரண்டைத் தில்லிக்கு கொண்டு வந்தார்.

**புதிய துறைகள்**

- ❖ திவான் - இ- பந்கான் - Department of Slave
- ❖ திவான்-இ-செயிராத் - Department of Charits.
- ❖ திவானி இஸ்டிகாக் - Department of Pension
- ❖ **பாது-இ-பிரோஸ்ஸாஹி என்ற தம் சுயசரிதையை எழுதினார்.**

**பிந்தைய துக்ளக்குகள் (1388 - 1413)**

- ❖ முகம்மது கான்
- ❖ கியாசூதின் துக்ளக்
- ❖ அபு பாகன்
- ❖ நாசுருதின் முகம்மது
- ❖ ஹியுமாயூன்



Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

- நசுருதின் முகம்மது

**பொது கண்ணோட்டம் :-**

- அரசு அலுவல்களில் **உலேமா எனப்பட்ட சமயறிஞரின்** செல்வாக்கு அதிகமாக இருந்தது.
- ***வஸீர்*** - தலைமையமைச்சராவார்.
- ***திவான்-இ-ரிஸாலத்*** அயலுறவு அமைச்சர்
- ***திவான்-இ-இன்ஷா*** -அரசரின் கடிதப் போக்குவரத்தை கவனிப்பவர்.
- ***திவான்-இ-ஆரிஸ்*** - இராணுவ ஆட்சிப்பொறுப்பைக் கவனிப்பவர்.
- ***சதர்-உஸ்-சதர்*** சமயத்துறை அறப்பணி.
- ***திவானி காஸ்*** - தலைமைக்காஸியின் பொறுப்பில் இயங்கி வந்த நீதித்துறை
- ***திவான்-இ-அமிர்கோஹி***- வேளாண்மைத்துறை தலைவர்.
- ***பரீத்-இ-மாமலிக்*** - ஒற்றர் முறை, அஞ்சல் ஆகிய துறைகளுக்கு தலைவர்.
- ***வக்கீல்-கி-தார்*** - அரண்மனை பராமரிப்பாளர்.
- ***மஜ்லிஸ்-இ-கஸ்வத்*** - ஆலோசனை குழு (சுல்தானுக்கு)
- கொத்தவால் - நகர ஆட்சிப்பொறுப்பு.
- முழுக்க முழுக்க முஸ்லிம் கருத்துக்களின்படி இந்தியாவில் முதலில் எழுப்பப்பட்ட கட்டிடம் நிஜாமுதீன் ஒளலியாவின் கல்லறை மீது அலாவுதினால் எழுப்பப்பட்ட **ஜமாத்கான் மசூதியாகும்**.
- **ஹௌஜ்-இ-காஸ்** என்ற குளத்தை கட்டுவித்தார் அலாவுதீன்
- தக்கில் தர்வாஸா-வங்கம்
- லாடக் தர்வாஸா - ஜான்பூர்
- அலை தர்வாஸா-டில்லி
- தீன் தர்வாஸா-குஜராத்
- பால்பனின் காலத்திலிருந்து கியாசுதீன் துக்ளக் காலம் வரை அமிர்குஸ்ரு அவைக்களப் புலவராகவும் பணியாற்றினார்.

## முகலாயர் பேரரசு

**பாபர் 1526-1530:-**

- இந்தியாவில் **முகலாய பேரரசை தோற்றுவித்தவர்**
- இயற்பெயர் : **ஜாகிருதீன் முகமது**
- தந்தை பெயர் **உமர் ஷேக் மிர்சா**
- பாபர் என்பதற்கு துருக்கி மொழியில் **"சிங்கம்"** என்று பொருள்



Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

- ❖ தந்தை வழியில் துருக்கிய தைமூருக்கும், தாய் வழியில் மங்கோலியா செங்கிஸ்கானுக்கும் **1483-ல்** பிறந்தார்.
- ❖ 1494-ல் பர்கானாவின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றார். பின்னர் உறவினர் ஒருவரிடம் ஆட்சியை இழந்தார்.
- ❖ பின்னர் சாமர்கண்ட், காபூல் படையெடுப்புகளுக்கு பிறகு இந்தியாவை நோக்கி படையெடுத்தார்.
- ❖ 1519 முதல் 1523 வரை 4 படையெடுப்புகளை மேற்கொண்டார்.
- ❖ 1525-ல் காபூலிலிருந்து இந்தியா மீது படையெடுத்தார். **லாகூரின் ஆளுநராக இருந்த தௌலத்கான் லோடியை** வென்று அப்பகுதியை கைப்பற்றி டெல்லியை நோக்கி முன்னேறினார்.

**முதலாம் பானிபட் போர்: 1526**

- ❖ பாபருக்கும், இப்ராஹிம் லோடிக்கும் இடையே கி.பி.1526 ஏப்ரல் 21-ல் நடைப்பெற்றது. லோடி கொல்லப்பட்டார். இதனால் டெல்லி சுல்தானிய ஆட்சி முடிவுக்கு வந்தது.
- ❖ பாபர் வெற்றிப் பெற்று, தன்னை **"இந்துஸ்தானத்தின் பேரரசர்"** என அறிவித்துக் கொண்டார்.
- ❖ பாபர் இப்போரில் **பீரங்கியை** பயன்படுத்தினார். இதுவே பாபரின் வெற்றிக்கு முக்கிய காரணம்.
- ❖ **இந்தியாவில் முதன் முதலில் பீரங்கியை பயன்படுத்தியவர் பாபர்.**
- ❖ பீரங்கியை பயன்படுத்திய பாபரின் வீரர்கள் - 1. உஸ்தாத் அலி 2. முஸ்தபா

## கான்வாப் போர் 1527

- ❖ பாபருக்கும், மேவார் மன்னர் ராணா சங்காவுக்கும் இடையே நடைபெற்றது.
- ❖ இப்ராஹிம் லோடிக்கு எதிராக படையெடுத்து வரும்படி பாபருக்கு அழைப்பு விடுத்தவர் ராணா சங்கா.
- ❖ இப்ராஹிம் லோடியை தோற்கடித்துவிட்டு நாடு திரும்பிவிட வேண்டும் என ராணா, பாபருக்கு கெடு விதித்திருந்தார். பாபர் வெற்றி பெற்றவுடன் இந்தியாவிலேயே தங்கிவிட்டார். இதனால் ராணா பாபர் மீது படையெடுத்தார். பாபர் வெற்றி பெற்றார்.
- ❖ இவ்வெற்றிக்கு பின்னர் **காஸி** என்ற பட்டத்தை சூட்டிக் கொண்டார்.



Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

**சந்தேரி போர்**

- சந்தேரிக் கோட்டையை பெறுவதில் **பாபருக்கும் மேதினிராய்**க்கும் இடையே இப்போர் நடைபெற்றது. இப்போரில் பாபர் வெற்றி பெற்றார். சந்தேரிக் கோட்டையை கைப்பற்றினார்.

**கோக்ரா போர் : 1529**

- பாபருக்கும் இப்ராஹிம் லோடியின் சகோதரா முகமது லோடிக்கும் இடையே இப்போர் நடைபெற்றது. பாபர் வெற்றி பெற்றார்.
- இப்போரின் மூலம் ஆப்கானியர் முழுவதும் இந்தியாவிலிருந்து அழிக்கப்பட்டனர்.
- பீகாரில் உள்ள கோக்ரா என்ற இடத்தில் இப்போர் நடைபெற்றது.

**இறப்பு:-**

- 1530-ல் ஆக்ராவில் காலமானார். இப்ராஹிம் லோடியின் தாய், பாபரின் சமையல்காரருக்கு கையூட்டு கொடுத்து பாபரின் உணவில் விஷம் கலக்க செய்தார்.
- பாபர் தன் **சுயசரிதயை** தன் தாய்மொழியான துருக்கி மொழியில் **துசுக்-இ-பாபரி** அல்லது **பாபரின் நினைவுகள்** என்ற நூலாக எழுதியுள்ளார்.

**ஹுமாயுன்: 1530-1540 மற்றும் 1555-1556**

- பாபருக்கு நான்கு மகன்கள் 1. ஹுமாயுன் 2. காம்ரான் 3. அஸ்காரி 4. ஹிந்தால்
- மூன்று மகள்கள் : 1. குல்ரங் 2. குல்சிரா 3. குல்பதான்
- பாபருக்கு பின் ஹுமாயுன் ஆட்சிக்கு வந்தார்.
- ஹுமாயுன் என்பதற்கு **அதிர்ஷ்டம்/நல்லவாய்ப்பு** என்று பொருள்.
- ஆட்சிக்கு வந்தவுடன் அரசை தன் சகோதரர்களுக்கு பகிர்ந்து கொடுத்து தன்னை பலவீனப்படுத்திக் கொண்டார். இவர் ஒரு அதிர்ஷ்டமில்லாத மன்னர்.
- வங்காளத்தை ஆட்சி செய்த ஷெர்கான் (ஷெர்ஷா) மீது படையெடுத்தார். அந்நேரத்தில் குஜராத்தை ஆட்சி செய்த பகதூர் ஷா டெல்லி மீது படையெடுத்தார். எனவே, ஷெர்கானுடன் தொடர்ந்து போரிட்டு வெற்றி பெறாமல் ஓர் ஒப்பந்தத்தை ஏற்படுத்திக்கொண்டு டில்லி திரும்பினார். இதனால் ஷெர்கான் தன் படை வலிமையை பெருக்கிக் கொண்டார்.



Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

**சௌசா போர்**

- 1539-ல் ஹுமாயுனுக்கும் ஷெர்கானுக்கும் இடையே சௌசா போர் நடைபெற்றது. ஷெர்கானின் பெரும் தாக்குதலுக்கு ஹுமாயுன் உள்ளானார்.

**கன்னோஜ் போர்**

- 1540-ல் *பில்கிராம் (கன்னோசி)* என்ற இடத்தில் ஹுமாயுனுக்கும் ஷெர்கானுக்கும் இடையே போர் நடைபெற்றது. இப்போரில் ஹுமாயுன் தோற்கடிக்கப்பட்டு பாரசீகம் விரட்டப்பட்டார்.
- பாரசீகத்தில் ஹமீதாபானு பேகம் (மும்தாஜ்) என்பவரை திருமணம் செய்துக் கொண்டார்.
- பாரசீக மன்னரின் உதவியை பெற ஷன்னி என்ற முஸ்லிம் பிரிவிலிருந்து ஷியா என்ற முஸ்லிம் பிரிவிற்கு மாறினார்.
- ஷியா பிரிவிற்கு மாறியதற்காக பாரசீக மன்னர் படையெடுத்து ஹுமாயுனுக்கு உதவினார். அப்படையைக் கொண்டு டில்லியை 1555-ல் சிக்கந்தர் லோடியிடமிருந்து கைப்பற்றி மீண்டும் ஆட்சி நடத்தினார்.
- 1556-ல் தொழுகையின்போது நூலக மாடிப்படியிலிருந்து தவறி விழுந்து இறந்தார்.
- அதிர்ஷ்டம் என பெயர் கொண்ட ஹுமாயுன் தன் வாழ்நாள் முழுவதும் அதிர்ஷ்டம் இல்லாமலேயே இறந்தார்.
- **ஜாமியா மஸ்ஜித்** மற்றும் **தின்பனா** என்ற கட்டிடங்களை கட்டினார்.

## சூர் மரபு

**ஷெர்ஷா சூர் : 1540-1545**

- சூர் மரபை தோற்றுவித்தவர் - ஷெர்ஷா (ஷெர்கான்)
- இவரின் இயற்பெயர் **பரீத்.** புலியை தன்னந்தனியாக அடித்துக் கொன்றதால் **ஷெர்கான்** என்ற தன் பெயரை ஷெர்ஷா என்று மாற்றிக் கொண்டார். **ஷெர்ஷா என்பதற்கு புலி** என்று பொருள்.
- இவர் பீகாரில் உள்ள சசாரம் பகுதியின் ஜாஹீர்தார்-ஆன ஹசன்கான் என்பவரின் மகனாவார்.
- இவர் கி.பி.1539-ல் சௌசா என்ற இடத்தில் ஹுமாயுனை தோற்கடித்தார். 1540-ல் ஷெர்ஷா என்ற பட்டத்துடன் ஆட்சிக்கு வந்தார்.



Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

- ❖ சிறந்த முறையில் ஆட்சியை நடத்தினார். எனவே, **ஷெர்ஷா அக்பரின் *முன்னோடி*** என்று அழைக்கப்பட்டார்.
- ❖ நான்கு முக்கிய சாலைகளை (**கிராண்ட் டிரங் சாலை**) அமைத்தார்.

  சோனார்கான் - சிந்து          ஆக்ரா - பர்காம்பூர்

  ஜோத்பூர் - சித்தூர்          லாகூர் - முல்தான்
- ❖ சமய சகிப்புத் தன்மையுடன் விளங்கினார்
- ❖ யமுனை நதிக்கரையில் **புராணகிலா** என்ற கோட்டையை கட்டினார். இவர் கி.பி.1545 ல் கலஞ்சார் கோட்டை முற்றுகையில் வெடிவிபத்தில் இறந்தார்.
- ❖ <u>நிர்வாகம்</u>

  திவானி-இ-விசாரத் - வரவு மற்றும் செலவு பொறுப்பாளர்,

  திவான-இ-ஆரிஷ் - இராணுவ பொறுப்பாளர்,

  திவானி-இ-இராவாலக் - வெளியுறவு மற்றும் தூதரகப் பொறுப்பாளர்,

  திவானி-இ-இன்ஷா - தகவல் அரசு ஆணைகள் மற்றும் கடித போக்குவரத்து பொறுப்பாளர்.
- ❖ **ரயத்வாரி முறையை** அறிமுகப்படுத்தினார். நில உரிமை பட்டா வழங்கப்பட்டது. நில வருவாய் 1:3 பங்கு நிலவரியாக வசூலிக்கப்பட்டது.
- ❖ நிர்வாகத்தை சீர்படுத்தினார். ஷெர்ஷா 47 சர்கார்களாக பிரித்தார். ஒவ்வொரு சர்க்காரும் **ஷிக்தார்** (சட்டம் ஒழுங்கு) மற்றும் **முதன்மை முன்சீப்** (நீதி வழங்குதல்) இவர்களுக்கு கீழ் நிர்வகிக்கப்பட்டது.
- ❖ பர்கான்களை பிரித்து 1. ஹிர்தார் - இராணுவம், 2. அமீன் - நிலவருவாய் 3. பொடேதார் - கருவூலம் 4. கர்த்தூண்கார் - கணக்காளர், 5. இக்தா எனப்படும் நிர்வாகப்பிரிவு
- ❖ இராணுவத்தில் குதிரைகளுக்கு சூடு போடும் **தாக்** முறையை அறிமுகப்படுத்தினார்.
- ❖ **நவீன நாணய முறையின் தந்தை** என்று அழைக்கப்படுகிறார்.
- ❖ ***டாம் என்ற வெள்ளி நாணயத்***தை அறிமுகப்படுத்தி 1835 வரை புழக்கத்தில் விட்டார். நாணயங்களில் தனது பெயரை தேவநாகரி எழுத்தில் பொறிக்க செய்தார்.
- ❖ பீகாரில் **சசாரம் நகரில் தனது கல்லறையை** உருவாக்கினார். டெல்லியில் புராணகீலா என்ற கட்டிடத்தை உருவாக்கினார்.



Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

- ❖ பெற்றோரை ஆதரித்தார். **மாலிக் முகமது ஜெயசீ** என்பவர் எழுதிய இந்தி நூல் **பத்மாவதி.**
- ❖ ஷெர்ஷாவிற்கு பிறகு அவரது வாரிசுகள் 1555 வரை டில்லியை ஆட்சி செய்தனர்.
- ❖ ஷெர்ஷாவிற்கு பிறகு ஆட்சிக்கு வந்தவர் **இஸ்லாம் ஷா.**
- ❖ சூர் மரபின் **கடைசி அரசர் சிங்கந்தர் லோடி.** இவரை ஹுமாயுன் தோற்கடித்துவிட்டு முகலாயர் அரசை மீண்டும் ஏற்படுத்தினார்.
- ❖ பயணிகள் வசதிகளுக்காக தங்கும் விடுதி **சராய்** ஏற்படுத்தினார்.

**அக்பர் 1556-1605:-**

- ❖ ஹுமாயுனுக்கும், ஹமீதா பானு பேகத்திற்கும் மகனாக 1542-ல் அமர்கோட்/அமரக்கோட்டை என்ற இடத்தில் பிறந்தார்.
- ❖ ஹுமாயுன் இறந்த பிறகு 1556-ல் அக்பர் முகலாய மன்னர் ஆனார். அப்போது அக்பருக்கு 13 வயது.

**இரண்டாம் பானிபட் போர் 1556.**

**அக்பருக்கும் ஹெமுவுக்கும்** இடையே நடைபெற்றது. இப்போரில் ஹெமுவின் கண்ணில் அம்பு பாய்ந்ததால், படைகள் சிதறியதால் அக்பர் வெற்றி பெற்றார்.

- ❖ ஆட்சிப் பொறுப்பேற்ற போது அக்பர் சிறுவனாக இருந்தமையால் ஆட்சிப் பொறுப்பை அக்பரின் அரசப் பிரதிநிதி பைராம்கான் ஏற்று நடத்தினார். இதனால் அரசவையில் பைராம்கானின் அதிகாரம் ஓங்கி இருந்தது.
- ❖ இதனை அக்பரின் வளர்ப்புத்தாய் **மாகம் அனகா** விரும்பவில்லை. மாகம் அனகா சூழ்ச்சியினால் அரசியலிருந்து பைராம்கான் விடுபட மெக்காவிற்கு அனுப்பி வைக்கப்பட்டார்.
- ❖ மெக்கா செல்லும் வழியில் பைராம்கான் கொலை செய்யப்பட்டார்.
- ❖ இதன் பிறகு **1560 முதல் 1564** வரை முகலாய ஆட்சி மாகம் **அனகா** கைக்கு மாறியது.
- ❖ இக்காலத்தில் முகலாய ஆட்சி பெண்கள் கைக்கு மாறியதால் இக்காலத்தை **பாவாடை ஆட்சி (peti Coat Government)** என்று அழைக்கப்படுகிறது.
- ❖ 1564-க்கு பிறகு ஆட்சி அக்பரின் அதிகாரத்திற்கு வந்தது. ராஜபுத்திரர் ஆதரவு இருந்தால்தான் ஆட்சி நிலைத்து இருக்க முடியும் என்று அக்பர்

Dept. of Employment



Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

நம்பினார். எனவே, ராஜபுத்திரர்களின் ஆதரவை பெற பல ராஜபுத்திர பெண்களை திருமணம் செய்து கொண்டார்.

❖ இவர் ராஜபுத்திர கொள்கையை கையாண்டது முக்கிய அம்சமாகும்.
❖ ராஜபுத்திரர் ராஜா பகவான் தாஸ் மகள் ஜோத்பாயை திருமணம் செய்து கொண்டார். ராஜா மான்சிங்குக்கு முக்கிய பதவி அளிக்கப்பட்டது.
❖ அக்பருக்கு அடிபணியாத ஒரே ராஜபுத்திர அரசு மேவார்.
❖ 1563-ல் கங்கையில் நீராடுவதற்கு விதிக்கப்பட்டிருந்த புனித வரியை நீக்கினார்.
❖ 1562-ல் இந்துக்கள் மீது விதிக்கப்பட்டிருந்த ஜிசியா வரியை நீக்கினார்.
❖ 1675-ல் பதேப்பூர் சிக்ரியில் **இபாதத்கானா** என்ற சமய வழிபாட்டுக் கூடத்தை கட்டினார். இதில் அனைத்து சமயத்தினரும் கலந்துக் கொண்டனர்.
❖ 1572-ல் குஜராத் மீது படையெடுத்து வெற்றிப் பெற்றார். அங்கு தனது வருவாய் அமைச்சர் **ராஜா தோடர்மால் மூலம் நிலையான நிலவரித் திட்டத்தை** அறிமுகப்படுத்தினார். 1/3 பங்கு நிலவரியாக வசூலிக்கப்பட்டது.
❖ நில வருவாய் ஆய்வுகளை மேற்கொள்பவர் - ராஜா தோடர்மால்.
❖ நில வருவாய், **ஜப்தி முறை, பந்தோபஸ்து முறை** என அழைக்கப்படும்.
❖ மேலும் இது சீரமைக்கப்பட்டு **தாஹாசால முறை** 1580-ல் நிறைவேற்றினார். இம்முறைப்படி 10 ஆண்டுகளின் விளைச்சலில் சராசரியை அடிப்படையாக கொண்டு நிலவரி நிர்ணயிக்கப்பட்டது.
❖ 1579-ல் அக்பர் தவறுபடா ஆணையை வெளியிட்டு தமது சமய அதிகாரங்களை உறுதிப்படுத்தினார்.
❖ நிலவரிகள் 4 வகை 1. போலஜ் (ஆண்டு தோறும்), 2.பரவுதி (2 ஆண்டுகள்) 3. சுச்சார் ( 3மற்றும் 4 ஆண்டுகள்) 4.பஞ்சார் (5 ஆண்டுகள்).
❖ அக்பரது ஆட்சி முறையில் **மன்சப்தாரி முறை** முக்கியமானதாகும். ஒவ்வொரு அதிகாரியின் கீழும் ஒரு தகுதி நிலை வழங்கப்பட்டது. குறைந்த பட்சமாக மன்சப்தாரி 10-ம், அதிகபட்சமாக மன்சப்தார் 5 ஆயிரம் ஆகும்.
❖ மன்சப்த் தகுதி நிலைகள் **சத் மற்றும் சாவர்** என இருவகைப்படும். சத் என்பது ஒருவரது தனிப்பட்ட அந்தஸ்தை குறிக்கும். சாவர் என்பது ஒருவர் வைத்திருக்க வேண்டிய குதிரை வீரர்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலானது.
❖ ராஜா தோடர்மால், பாகவத புராணத்தை பாரசீக மொழியில் மொழிபெயர்த்தார்.
❖ **அபுல் பாசல் எழுதிய நூல்கள்**-அயனி அக்பரி, அக்பர் நாமா,
❖ **அபுல்பைசி** இராமாயண, மகாபாரதத்தை பாரசீகத்தில் மொழி பெயர்த்தார்.
❖ குஜராத் வெற்றியின் நினைவாக ஆக்ரா அருகே **பதேபூர் சிக்ரி (வெற்றி நகரம்)** என்ற நகரை நிறுவி தலைநகரை ஆக்ராவிலிருந்து அங்கு மாற்றினார்.



Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

- 1576-ல் அக்பருக்கும் மேவார் மன்னர் ராணா பிரதாப் சிங்குக்கும் இடையே **ஹால்டிகாட் போர்** நடைபெற்றது.
- அக்பர் ஆரம்ப காலத்தில் சூபி துறவிகளுடன் உறவு கொண்டிருந்தார். அவரது **ஆசான் அப்துல் லத்தீப்பின்** போதனைகளால் ஒரு பேராரசை நிறுவ வேண்டும் என ஆசைப்பட்டார். ஆம்பர் நாட்டு இளவரசி ஜோத்பாயை மணந்த பின்னர் புனித பயண வரியை ரத்து செய்தார்.
- 1582-ல் **தீன்-இலாஹி** அல்லது **இறை நம்பிக்கை** என்ற புதிய சமயத்தை தோற்றுவித்தார். இதில் அனைத்து சமயத்தினரும் சேரலாம்.
- இச்சமயத்தில் சேர்ந்த ஒரே இந்து ராஜாபீர்பால். எனவே, அக்பரால் தோற்றுவிக்கப்பட்ட இச்சமயம் அக்பரின் காலத்திலேயே மறைந்தது. இம்மதம் பகுத்தறிவை அடிப்படையாக கொண்டது.
- **காந்தேஷ்** (குஜராத்) வெற்றியின் நினைவாக **பதேபுர்-சிக்ரி** கோட்டையும், **புலந்தவர்வாசா** என்ற நுழைவாயிலையும் அக்பர் கட்டினார்.
- அக்பரால் உருவாக்கப்பட்ட இராணுவ அமைப்பு மன்சப்தாரி. மன்சப் (சாட்) என்றால் தரம் அல்லது தகுதி (சாவர்) என்றும் பொருள்.
- **அக்பரின் மஹால், ஜஹாங்கீர் மஹால், பஞ்ச் மஹால் ஜோத்பாய் அரண்மனை** போன்ற சிறப்பு பளிங்கு கற்கள் கொண்ட கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டன. இவரால் மொஹலாயப் பேரரசு உண்மையாகவே நிலைநாட்டப்பட்டது.
- ***நக்காரா*** என்ற இசைக் கருவியை உருவாக்கினார். மேலும் இக்கருவியை வாசிப்பதில் வல்லவர். அக்பர் அவையில் இருந்த புகழ்பெற்ற இசைக் கலைஞர் **தான்சேன்.**
- **பீர்பால்** என்ற நகைச்சுவை மேதை இவர் காலத்தில் வாழ்ந்தார்.
- அக்பரின் காலத்தில் இசைக்கலை வளர்ச்சி பெற்றது.
- 1605-ல் அக்பர் காலமானார். அக்பருக்கு எழுத படிக்கத் தெரியாது. அக்பர் ஒரு திக்குவாய்.

## ஜஹாங்கிர்: 1605-1627

- **அக்பருக்கும்** ராஜபுத்திர இளவரசி **ஜோத்பாய்க்கும்** மகனாக பிறந்தவர்.
- இயற்பெயர் சலீம். இவர் **ஜஹாங்கீர் அல்லது உலகினை வெல்பவர்** என்ற பெயரில் 1605-ல் அரியணை ஏறினார்.
- ஆட்சியின் ஆரம்பத்தில் இவரது மகன் குஸ்ரு கிளர்ச்சி செய்தார். கிளர்ச்சிக்கு உதவியவர், ஐந்தாம் சீக்கிய குரு அர்ஜீன் சிங். குஸ்ருவிற்கு உதவியதால் அர்ஜுன்சிங்கை ஜஹாங்கிர் கொலை செய்தார்.
- 1611-ல் நூர்ஜஹானை திருமணம் செய்துக் கொண்டார். நூர்ஜஹானின் இயற்பெயர் மெகருன்னிசா. நூர்ஜஹான் என்பதற்கு **"உலகின் ஒளி"** என்று பொருள். இவர் **நூர்மஹால் (அரண்மனையின் ஒளி)** என்றும் அழைக்கப்பட்டார்.
- 1611 முதல் 1626 வரை ஆட்சியை முழு அதிகாரத்துடன் நடத்தியவர் நூர்ஜஹான்.



Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

இக்காலம் **நூர்ஜஹனின் காலம்** எனப்படுகிறது.

❖ **நூர்ஜஹான் ஜண்டா** என்ற ஒரு ஆதரவுக் குழுவை அமைத்துக் கொண்டு அரசவையை தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்தார்.

❖ தனது மூத்த சகோதரர் *அசப்கானின் மகள்* **அர்ஜுமந்த் பானு பேகம்** *(மும்தாஜ்)* என்பவரை ஜஹாங்கீரின் 3வது மகன் **குர்ரம் (ஷாஜஹான்)**-ற்கு திருமணம் செய்து வைத்தார்.

❖ 1623-ல் ஷாஜஹான், ஜஹாங்கீருக்கு எதிராக கிளர்ச்சி செய்தார்.

❖ மக்கள் நீதியை பெறுவதற்காக ஆக்ரா கோட்டைக்கும் (ஷர்பஜ் அரண்மனை) யமுனை நதிக்கரைக்கும் இடையே **நீதிச் சங்கிலியை** ஜஹாங்கீர் அமைத்தார்.

❖ 1609-ல் இவரின் அவைக்கு ஆங்கிலேய தூதர் **வில்லியம் ஹாக்கின்ஸ்** கிழக்கிந்திய கம்பெனிக்கு வணிகத் தளம் அமைக்க அனுமதி கோரி வருகை தந்தார். மேலும், தாமஸ்ரோ ஜஹாங்கீருக்கு ஓவியத்தை பரிசாக அளித்தார்.

❖ 1613 சூரத்தில் ஆங்கிலேயர்கள் வணிக தளம் (தொழிற்சாலை) அமைக்க ஜஹாங்கீர் அனுமதி அளித்தார்.

❖ ஜஹாங்கீர் ஓவியத்தில் அதிக ஈடுபாடு கொண்டிருந்தார். ஓவியத்திற்கு 2வது அதிக முக்கியத்துவம் கொடுத்தவர் **ஹுமாயூன்.**

❖ நகரில் **ஷாலிமர் மற்றும் நிஷாத் பூந்தோட்டங்களை** உருவாக்கினார். சிக்கேந்திராவில் அக்பரின் கல்லறையை கட்டினார்.

❖ இந்தியாவில் புகையிலையை அறிமுகப்படுத்தியவர் ஜஹாங்கீர். இவருடைய சுயசரிதை நூல் **துசுக்-இ-ஜஹாங்கிரி** ஆகும். 1627-ல் இறந்தார்.

**ஷாஜஹான் : 1627-1658)**

❖ ஜஹாங்கிரின் மகன். இயற்பெயர் குர்ரம். இவர் கி.பி.1592-ல் லாகூரில் பிறந்தார். ஷாஜஹான் என்பதற்கு ***உலகின் அரசன்*** என்று பொருள்.

❖ இவருக்கு நான்கு மகன்கள் இருந்தனர். 1. துரா ஷுஹோ (கல்வியில் சிறந்தவர்) 2. ஷுஜா 3. ஔரங்கசீப் 4.முரத்.

❖ ஷாஜகானின் மனைவி மும்தாஜ் பிரவசத்தின் போது இறந்து போனாள். தனது மனைவியின் நினைவாக தாஜ்மஹாலை கட்டினார். கட்ட ஆரம்பித்த ஆண்டு **1632** கட்டி முடிக்கப்பட்ட ஆண்டு **1653.** (22 ஆண்டுகள். 20 லட்சம்)

❖ தாஜ்மஹாலை வடிவமைத்தவர். **உஸ்தாத் இஷா.** இவர் டெல்லி செங்கோட்டை, **அதினுள் ரங்க் மஹால், மோதி மஹால், முத்து மஹால்,**



Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

**திவானி-இ-ஆம், திவானி-இ-காஷ்மீர்** மாளிகைகளைக் கட்டினார். வெள்ளைப் பளிங்கு கற்களைக் கொண்டு **ஜும்மா மசூதி** கட்டப்பட்டது.

- ❖ ***கோஹினூர் வைரம் கொண்ட மயிலாசனம்*** உருவாக்கப்பட்டது. இது பாரசீக படையெடுப்பால் ***நாதிர்ஷா*** கி.பி.1739-ல் எடுத்துச் சென்றார். இது தற்போது இங்கிலாந்து மியூசியத்தில் உள்ளது.

**ஔரங்கசீப்:1657-1707**

- ❖ ஷாஜஹானின் மூன்றாவது மகன். முகலாய அரசின் ***கடைசி வலிமை வாய்ந்த மன்***னர்.
- ❖ ஆட்சிக்கு வந்த உடன் தனது பெயரை ***ஆலம்கிர் (உலகை வெல்பவர்)*** என மாற்றிக் கொண்டார்.
- ❖ முஸ்லிம் ஷன்னி பிரிவைச் சேர்ந்தவர். சமய வெறியுடன் நடந்துக் கொண்டார். மற்ற சமயத்தவர்களை அதிகம் துன்புறுத்தினார். எனவே, மக்கள் அவருக்கு எதிராக கிளர்ச்சி செய்தனர்.
- ❖ ஔரங்கசீப்பின் மதக்கொள்கை முகலாய பேரரசின் வீழ்ச்சிக்கு காரணமாக அமைந்தது.
- ❖ சமயத்தை தவிர்த்து பார்க்கும்போது, ஔரங்கசிப் சிறந்த ஆட்சியாளராக விளங்கினார். இவர் தனிப்பட்ட வாழ்க்கையில் கடும் உழைப்பாளியாகவும் ஒழுக்க சீலராகவும், எளிமையை கடைபிடிப்பவராகவும் இருந்தார். குர்ரானில் கூறியபடி நடந்துக் கொண்டார். நான்கு பெண்களை மட்டும் திருமணம் செய்துக் கொண்டார். குரானை எழுதி விற்று அதன்மூலம் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு வாழ்க்கை நடத்தினார்.
- ❖ ஔரங்கசீப் காலத்தில் வீரசிவாஜி தலைமையில் மராட்டியர்கள் எழுச்சி பெற்றனர். ஔரங்கசீப்பை தக்காணத்தில் வளரவிடாமல் மராட்டியர்கள் தடுத்தனர்.
- ❖ மராட்டியரிடம் பல தோல்விகளை பெற்றதால் மராட்டிய மன்னர் சிவாஜி **"தக்காண புண்"** என்று அழைக்கப்படுகிறார். (தக்காண குடற்புண்



Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

ஔரங்கசீப்பை அழித்தது என ஜே.என்.சர்க்கார் குறிப்பிடுகிறார்) இந்தியாவை முஸ்லிம் நாடாக்க விரும்பினார்.

❖ மக்கள் போதைப் பொருட்களை பயன்படுத்துவதை தடை செய்தார். இந்துக்கள் கொண்டாடும் **தசரா விழா**, முஸ்லிம்கள் கொண்டாடும் **நவ்ரோஸ் விழா** போன்றவைகளை தடை செய்தார். பாங்க் எனப்படும் தாவரத்தை பயிரிடுவதையும் தடை செய்தார். **மொகரம் பண்டிகை** கொண்டாட தடை விதிக்கப்பட்டது.

❖ அக்பரால் நிறுத்தப்பட்ட ஜிசியா வரியையும், பயணிகளின் புனித வரியையும் 1679-ல் மீண்டும் இந்துக்களிடம் வசூலித்தார்.

❖ வானவியல், ஜோதிடக்கலை அறிஞர்களை அவையில் இருந்து நீக்கினார். இந்துக்கோவில்களை இடித்து தரைமட்டமாக்கினார்.

❖ **ஒன்பதாவது சீக்கிய குரு தேஜ்பகதூரை** கொலை செய்தார். எனவே, சீக்கியர்கள் முகலாயர்களுக்கு எதிராக ஆயுதம் தாங்கி போராட ஆரம்பித்தனர்.

❖ **10-வது சீக்கிய குரு கோவிந்த் சிங்க் கால்சா** என்ற இராணுவ அமைப்பை உருவாக்கி ஔரங்கசீப்பை எதிர்த்தார்.

❖ 1707-ல் ஔரங்கசீப் இறந்தார்.

## <u>முகலாயர் கால சிறப்பு அம்சங்கள்</u>

**கட்டடக்கலை:**

❖ அக்பர்: ஆக்ரா கோட்டை (சிகப்பு மணற்பாறைகள்), பதேபூர்-சிக்ரி, ஜோத்பாய் அரண்மனை, புலந்தர் வாஸா. டெல்லியில் உள்ள ஹுமாயூன் கல்லறை.

❖ ஷாஜஹான்: முத்து மசூதி (வெள்ளை நிற பளிங்கு கற்கள்), ஜும்மா மசூதி (இந்தியாவின் மிகப் பெரிய மசூதி- செந்நிற கற்கள்) தாஜ்மஹால், செங்கோட்டை (வெண்ணிற பளிங்கு கற்கள்), திவானி-ஆம், திவானி-காஸ் கட்டினார்.

❖ இவர் காலத்தில் காணப்பட்ட அலங்கார வேலைகளுக்கு **பியட்ரா டியூரா** என்று பெயர்.

❖ முகலாயர்களின் ஆட்சி இருக்கையான **மயிலாசனத்தை** செய்தவர். ஐந்து அடுக்குகள் கொண்ட பஞ்ச மஹால் ஏற்படுத்தப்பட்டது.

❖ காஷ்மீரில் நிஷாபாக், லாகூரில் ஷாலிமர்பாக், பஞ்சாப்பில் பங்ச்சோர் தோட்டம்.



Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

- ஹுமாயூன் பாரசீகத்திலிருந்து இந்தியா திரும்பிய போது மிர் சையது அலி, அப்துல்சமது என்ற புகழ்பெற்ற ஓவியர்களை அழைத்து வந்தார். மேலும் பஜ்வான், மிஸ்கினா, தஜ்வந்த் ஆகிய ஓவியர்கள் அக்பர் அவையில் இருந்தனர்.
- மகாபாரதம், இராமாயணம் ஆகியவை பாரசீக மொழியில் எழுதப்பட்டு ஓவியங்களாக தீட்டப்பட்டன.

**நூல்கள்:-**

- அக்பரின் அவையில் இருந்த வரலாற்று ஆசிரியர் அபுல்-பாசல் அக்பர் நாமா, அயினி அக்பரி என்ற நூல்களை எழுதியுள்ளார்.
- பாபர் துசுக்-யி-பாபரி என்ற தன்சுயசரிமையை துருக்கி மொழியில் எழுதினார்.
- ஜஹாங்கிர் துசுக்-யி-ஜஹாங்கிரி என்ற தன் சுயசரிதையை எழுதினார்.
- அக்பர் அவையில் இருந்த துளசிதாசர் (சிறந்த கவிஞர்) ராமாயணத்தை ராமசரிதமனஸ் என்ற பெயரில் இந்தி மொழியில் எழுதினார்.
- அப்துல் ஹமீது லகோரி என்பவர் பாதுஷா நாமா என்ற நூலை எழுதியுள்ளார்.
- ஷாஜகான் நாமாவை எழுதியவர் **இனயாத்கான்.**
- ஷாஜகானின் புதல்வர் "தாராஷிக்கோ" என்பவர் பகவத் கீதை, உபநிடதங்களை பாரசீகத்தில் மொழி பெயர்த்தார்.
- முகலாயர்களின் கடைசி அரசர் - இரண்டாம் பகதூர் ஷா.
- உருளைக் கிழங்கு, சிகப்பு மிளகாய் அறிமுகப்படுத்தப்பட்டது. சேத் மற்றும் போரா வணிகர்கள் தொலைதூர வர்த்தகத்தில் ஈடுபட்டனர். பஞ்சாராக்கள் எனப்படும் வணிகர்கள் மொத்த வியாபாரத்தில் ஈடுபட்டனர்.
- குஜராத் வணிகர்கள், இந்துக்கள், சமணர்கள், முஸ்லீம்கள் ஆகவும், ராஜஸ்தானில் மார்வாடிகள் எனப்படும் ஆஸ்வால்கள், மகேஸ்வரிகள், அகர்வால்கள், ஆப்கானிகளான முல்தானிகள், கத்திரிகள் ஆகியோர் மத்திய ஆசியாவுடனும் வணிகத் தொடர்பு வைத்திருந்தனர்.



Downloaded from https://t.me/tnpscfree

Dept. of Employment

https://t.me/tnpscfree

❖ சோழக்கடற்கரையில் செட்டியார்களும், மலபார் கடற்கரையில் முஸ்லீம்களும் வணிகம் செய்தனர்.
❖ காரீயம், செம்பு, போர்க்குதிரைகள், தந்தம், தங்கம், வெள்ளி ஆகியவை இறக்குமதி செய்யப்பட்டன. சக்கரை, அரிசி, மஸ்லின் துணி, பட்டு ஏற்றுமதி செய்யப்பட்டது.

**நாதிர்ஷா படையெடுப்பு:(1739)-**

❖ பாரசீகத்தில் தோன்றிய போர்வீரன் நாதிர்ஷா. இவர் இந்தியாவின் இயற்கை செல்வத்தை கொள்ளையடிக்க இந்தியாவின் மீது படையெடுத்தார்.
❖ 1739-இந்தியாவின் மீது படையெடுத்து கோஹினூர் வைரம் மற்றும் மயிலாசனத்தை கடத்திச் சென்றார். தற்போது அவை இரண்டும் இங்கிலாந்து ராணியிடம் உள்ளது.
❖ 1748-ல் நாதிர்ஷா படைத்தளபதி அகமது ஷா அப்தாலி இந்தியாவின் மீது படையெடுத்தார். இவர் ஐந்து முறை இந்தியாவின் மீது படையெடுத்துள்ளார்.
❖ 1761-ல் அகமது ஷா அப்தாலிக்கும் மராட்டியர்களுக்கும் இடையே மூன்றாவது பானிபட் போர் நடைபெற்றது. போரில மராட்டியர்கள் தோற்கடிக்கப்பட்டனர்.
❖ நாதிர்ஷா படையெடுப்பு மொகலாய பேரரசுக்கு முடிவு கட்டியது. இவர் படையெடுப்பு இந்தியாவை ரத்த பூமியாக்கியது.

**அகமது ஷா அப்தாலி**

❖ நாதிர்ஷாவின் மரணத்தை தொடர்ந்து இவர் ஆப்கானிஸ்தானில் ஆட்சியாளர் ஆனார்.

**பொருளாதாரம்:-**

❖ புகையிலை, மக்காச்சோளம்,மிளகாய் ஆகியவை இவர்கள் காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது.
❖ செத் மற்றும் போரா தொலை துார வர்த்தகம், பாணி என்பவர் உட்பகுதி வணிகர்கள்.
❖ ஆஸ்வால்கள் மகேஸ்வர்கள், அகர்வால்கள் ஆகியோர்கள் மார்வாடிகள்.
❖ இவர்கள் காலத்தில் வாழ்ந்த சமய துறவிகள் ஏக்நாத், துக்காராம், ராம்தாஸ்.
❖ இவர்கள் காலத்தில் வாழ்ந்த ஓவியர்கள் மிர்சையது அலி, அப்துல்சமது
❖ அரசவை கலைஞர்கள் பஸ்வான், மிஸ்கினர், தஸ்வந்த்.



Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

- ஹம்ஷா நாமா – 1200 ஓவியங்கள் உள்ளன.
- ஜஹாங்கீர் காலத்தில் வாழ்ந்த ஓவியர்கள், அபுல் ஹாசன், பிசர் தாஸ, மது ஆனந்த், கோவர்த்தன், உஸ்தாத், மன்சூர்.

## மராட்டியர்கள்

- மராட்டியர்கள் தக்காணம் மற்றும் மஹாராஷ்டிரா மலைப்பகுதிகளில் வாழ்ந்த மக்கள். இவர்கள் கொரில்லாப் போர்முறையை பயன்படுத்தியவர்கள்.
- இவர்களுடைய அரசுக்கு புவியியல் அமைப்பு மற்றும் அடர்ந்த காடுகள் உறுதுணையாக இருந்தன.
- துக்காராம், ராம்தாஸ், வாமன் பண்டிட், ஏக்நாத் போன்ற ஆன்மீக பெரியவர்கள் சமூக ஒற்றுமைக்கு வித்திட்டனர்.
- சிவாஜியால் அரசியல் ஒற்றுமை ஏற்பட்டது.
- வலிமை மிக்க மராட்டிய அரசை உருவாக்கிய பெருமை ஷாஜி போன்ஸ்லே மற்றும் அவரது மகன் சிவாஜி இருவரையே சாரும்.

## சிவாஜி: (1627-1680 அல்லது 1630-1680)

- **மராட்டிய பேரரசை**-தோற்றுவித்தவர் - சிவாஜி
- தந்தை - ஷாஜி பான்ஸ்லே, தாய் - ஜீஜா பாய் பாதுகாவலர் - தாதாபாய் கொண்டதேவ் (ஆசிரியர் மற்றும் தாத்தா) பூனாவிற்கு அருகில் ˙சிவனேரி கோட்டையில் கி.பி 1627-ல் சிவாஜி பிறந்தார்.
- 1637-ல் தந்தையின் **ஜாகீரான பூனாவை** சிவாஜி பெற்றார்.
- 1646-ல் பீஜப்பூர் மன்னரை சிவாஜி தாக்கினார். எனவே பீஜப்பூர் மன்னர் சிவாஜியை அடக்க அப்சல்கானை அனுப்பி வைத்தார்.
- சிவாஜி பீஜப்பூர் சுல்தான் அனுப்பிய அப்சல்கானை புலி நகத்தால் குத்தி கொலை செய்தார்.
- 1647-ல் சிவாஜியின் பாதுகாவலரான தாதாஜி கொண்டதேவ் மறைவுக்கு பிறகு ஜாகீரின் முழுப்பொறுப்பை ஏற்றார்.
- மராட்டியத்தில் சிவாஜி எழுச்சி பெறுவதை ஔரங்கசீப் விரும்பவில்லை. எனவே, சிவாஜியை அடக்குவதற்கு செயிஸ்டகானை அனுப்பி வைத்தார். சிவாஜியின் தாக்குதலில் ஒரு கட்டை விரலை இழந்து செயிஸ்டகான் தப்பி ஓடினார்.
- 1664-ல் முகலாயர்களின் முக்கிய துறைமுகமான சூரத்தை சூறையாடினார்.



Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

- ❖ சிவாஜியை தோற்கடிக்க முடியாத ஔரங்கசீப் தந்திரமாக அடக்குவதற்கு 1665 ல் ஆம்பர்மன்னர் ஜெயித்சிங்கை அனுப்பிவைத்தார்.
- ❖ ஜெயித்சிங் சிவாஜியுடன் சண்டையிடாமல் 1665-ல் புரந்தர் உடன்படிக்கையை செய்து கொண்டார். இவ்வுடன்படிக்கையின்படி சிவாஜி ஔரங்கசீப்பின் ஆக்ரா கோட்டைக்கு செல்ல ஒப்புக்கொண்டார். மேலும் தன்னிடம் இருந்த கோட்டைகளில் 23-ஐ ஔரங்கசீப்பிடம் கொடுத்தார்.
- ❖ ஆக்ரா சென்ற சிவாஜியை ஔரங்கசீப் கைது செய்து சிறையில் அடைத்தார். (1666)
- ❖ சிறையில் அடைக்கப்பட்ட சிவாஜியும், அவரது மகன் சாம்பாஜியும் தந்திரமாக கோட்டையிலிருந்து தப்பி மராட்டியம் வந்தனர்.
- ❖ மீண்டும் 1670-ல் சூரத்தை கொள்ளையடித்தனர்.
- ❖ 1674-ல் ரெய்கர் கோட்டையில் சத்ரபதி சிவாஜி என்ற பட்டத்தை சூட்டிக்கொண்டார்.
- ❖ செஞ்சி, வேலூர் மீது படையெடுத்து அப்பகுதிகளை கைப்பற்றிக் கொண்டார்.
- ❖ தஞ்சையை நோக்கி படையெடுத்து வரும்பொழுது கொள்ளிடத்தில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதால் நீருக்கு பயந்து நாடு திரும்பினார்.
- ❖ சிவாஜிக்கு போர் பயிற்சி அளித்தவர் - தாதாஜி கொண்டதேவ். (சிவாஜியின் தாத்தா)
- ❖ சிவாஜிக்கு மன தைரியத்தை அளித்தவர் - ஜீஜா பாய் (சிவாஜியின் தாய்)
- ❖ போர்களில் மறைந்திருந்து தாக்கும் கொரில்லா போர்முறையை சிவாஜி பயன்படுத்தினார்.
- ❖ சிவாஜி "மலை எலி" என்று அழைக்கப்பட்டார்.
- ❖ ஔரங்கசீப்பின் தக்காண கொள்கையை சிவாஜி தோற்கடித்ததால் சிவாஜி தக்காணப்புண் என அழைக்கப்படுகிறார்.
- ❖ சிவாஜி இறப்பு – 1680.
- ❖ சிவாஜி மறைவுக்குப் பின் அவருடைய புதல்வர்கள் சாம்பாஜிக்கும், ராஜாராமுக்கும் ஏற்பட்ட வாரிசுரிமைப் போரில் சாம்பாஜி வெற்றி பெற்றார். ஆனால் அவர் மொகலாயர்களால் சிறைபிடிக்கப்பட்டு தூக்கிலிடப்பட்டார்.
- ❖ அடுத்து ராஜாராம் ஆட்சிக்கு வந்தார். பின்னர் மொகலாயர்களின் விரட்டலுக்கு பயந்து செஞ்சியில் தஞ்சம் புகுந்தார். சதாராவில் இறந்தார்.



Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

- இவரது மனைவி தாராபாயை அரசு பிரதிநிதியாகக் கொண்டு இரண்டாம் சிவாஜி ஆட்சிக்கு வந்தார். பின்னர் இவரது மகன் ஷாகு ஆட்சிப்பொறுப்பை ஏற்றார்.
- மராட்டிய மன்னர் ஷாகு காலத்தில் பேஷ்வாக்கள் (தலைமை அமைச்சர்கள்) ஆட்சியில் அதிகாரம் பெற்று விளங்கினார்.
- ஷாகு திறமையற்றவராக இருந்ததால் பேஷ்வாக்கள் ஆட்சியை கைப்பற்றினார்.

**மராட்டியர்களின் ஆட்சி முறை:-**

- சிவாஜியின் அவையில் "அஷ்ட பிரதான்" என்று அழைக்கப்பட்ட 8 அமைச்சர்கள் இருந்தனர். அண்டை நாடுகளில் 'சௌத்' (1/4 பங்கு வரி) "சர்தேஷ்முகி" (1/10 பங்கு வரி) என்ற வரிகளை வசூலித்தனர்.
    1. பேஷ்வா (பிரதம அமைச்சர்) நிதி மற்றும் நிர்வாகம். (பேஷ்வா என்பது பாரசீகத்து பட்டமாகும்.
    2. மந்திரி (காலமுறை அமைச்சர்
    3. சச்சிவா (உள்துறை அமைச்சர்)
    4. சமந்த் (வெளியுறவு அமைச்சர்)
    5. சேனாதிபதி அல்லது சார்-இ-நோபத் - (இராணுவ அமைச்சர்)
    6. அமத்தியா (கணக்கு மேலாளர்)
    7. பண்டிட்ராவ் (சமய தலைவர்)
    8. நியாயதீஷ் (நிதி துறை)
- சிவாஜியின் பேரரசு **சுயராஜ்யம்** என அழைக்கப்பட்டது. இவர் **ஜமீன்தாரி முறையை** ஒழித்தார்.
- **படேல்** என்ற அதிகாரி குற்றவியல் வழக்குகளை விசாரித்தார். மேல்முறையீட்டினை **நியாயதீஷ்** என்ற அதிகாரி விசாரித்தார்.
- சிவாஜி மொத்தம் 240 கோட்டைகளை வைத்திருந்தார். அதில் வலிமையானது **ரெய்கார்** கோட்டை.



Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

- **காதி** என்ற அளவுகோலை பயன்படுத்தி நிலங்கள் அளக்கப்பட்டன.
- நிலங்கள் 3 வகையாக பிரிக்கப்பட்டது.
- குர்கூன்கள் என்ற வருவாய் துறை அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர்.
- மராட்டிய குதிரைப்படை 2 பிரிவுகளை கொண்டது.
  1. பர்கீர்கள் - அரசின் மேற்பார்வையில் பராமரிக்கப்பட்டது.
  2. சிலாதார்கள் - இது உயர்குடியினர் பராமரிப்பில் இருந்தது.

**பேஷ்வாக்கள் 1713-1818**

- சாம்பாஜிக்கு பின் வழிவந்தவர்களில் சாகு என்பவர் முக்கியமானவராவார். இவர் அரசராவதற்கு காரணமானவர் பாலாஜி விஸ்வநாத்.
- இவர் பேஷ்வா அல்லது பிரதம அமைச்சராக நியமிக்கப்பட்டார். பிரதம அமைச்சர்கள் பேஷ்வாக்கள் எனப்பட்டனர்.
- சாகுக்கு பிறகு 1713-ல் பீஷ்வாக்கள் ஆட்சி தொடங்கியது.

**பாலாஜி விஸ்வநாத் (கி.பி.1713-1720)**

- மராட்டியத்தின் முதல் பேஷ்வா- பாலாஜி விஸ்வநாத்
- பாலாஜி விஸ்வநாத்திற்கு பின்னர் அவர் மகன் முதலாம் பாஜிராவ் (1720-1740) பொறுப்பேற்றார். இவர் முற்போக்கு கொள்கையை கடைப்பிடித்தார்.
- மராட்டியத் தலைவர்கள் அடங்கிய கூட்டிணைவு ஒன்றினை ஏற்படுத்தினார்.
- இவருக்கு பின்னர் இவருடைய மகன் பேஷ்வா பாலாஜி பாஜிராவ் (1740-1761) பொறுப்பேற்றார்.
- 1761-ல் பேஷ்வா பாலாஜி பாஜிராவிற்கும், அகமது ஷா அப்தாலிக்கும் இடையே மூன்றாவது பானிபட்டு போர் நடைபெற்றது. போரில் மராட்டியர்கள் தோல்வியடைந்தனர்.

## நாயக்கர்களின் ஆட்சி

**மதுரை நாயக்கர்கள்**

- விஜய நகரப் பேரரசின் இறுதியில் **நாயக்கர்** ஆட்சி தமிழ்நாட்டில் தோற்றுவிக்கப்பட்டது. **நாயக்** என்ற வார்த்தைக்கு தலைவர் அல்லது தளபதி என்று பொருள்.



Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

- இவர்கள் விஜயநகர பேரரசின் கீழ் முகவர்களாக செயல்பட்டனர்.
- கிபி 1529-ல் மதுரைப் பிரதிநிதியாக விஸ்வநாத நாயக்கர், கிருஷ்ணதேவராயரால் நியமிக்கப்பட்டார்.
- இவர் தனது அமைச்சர் ஆரிய நாதர் உதவியுடன் **பாளையக்காரர்** முறையை அறிமுகப்படுத்தினார். மக்கள் காவல் பிச்சை என்ற வரியினை பாளையக்காரர்களுக்கு செலுத்தினர்.

**திருமலை நாயக்கர்**

- இவர் மைசூர் இராணுவத்தை திண்டுக்கலில் தோற்கடித்தார்.
- திருவாங்கூர் அரசர் உன்னி கேரள வர்மனை போரிட்டு வரி செலுத்தச் செய்தார்.
- முஸ்லீம்கள் தமிழ்நாட்டின் மீது படையெடுக்கக் காரணமாக அமைந்தார்.
- இவர் கோல்கொண்டா சுல்தானை வேலூர் மீது படையெடுக்க வேண்டினார். இதனால் வேலூர் சுல்தான் வசமாக்கப்பட்டது. பின்னர் மதுரையை கைப்பற்ற சுல்தான் மிரட்டல் விடுத்தார். இதனால் நாயக்கர் மைசூர் படையின் உதவியுடன் எதிரிகளின் மூக்கு, உதடுகளை துண்டித்தார். இந்த விநோத போர் மூக்கறுப்பு போர் என்று அழைக்கப்படுகிறது.
- இவர் தலைநகரை திருச்சியிலிருந்து மதுரைக்கு மாற்றினார். சமஸ்கிருத மேதை நீலகண்ட தீட்சிதரை போற்றினார்.
- **திருமலை நாயக்கர் மஹால்** கட்டப்பட்டது.

**இராணி மங்கம்மாள்:-**

- திருமலை நாயக்கருக்கு பிறகு ஆட்சி செய்த அரசி இராணி மங்கம்மாள். இவர் சொக்கநாத நாயக்கரின் மனைவி.
- இவர் நீர்ப்பாசன திட்டத்திற்காக உய்யகொண்டான் கால்வாயை ஏற்படுத்தினார்.

**மீனாட்சி**

- விஜயரெங்க நாயக்கருக்கு ஆண் வாரிசு இல்லாததால் இவர் மனைவி மீனாட்சி பொறுப்பேற்றார்.



Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

- ❖ இவர் தனது வளர்ப்பு மகனின் தந்தை பங்காருவின் சதியை முறியடிக்க ஆற்காட்டின் சந்தா சாகிப்பின் உதவியை நாடினார். இதற்கு ஒரு கோடி ரூபாய் கொடுக்க ஒப்புக்கொண்டார்.
- ❖ உறுதி மொழியை நிறைவேற்ற முடியாததால் சாகிப் மதுரையை கைப்பற்றும் நோக்கில் மீனாட்சியை கைது செய்து சிறைப்படுத்தினார். இதனால் மீனாட்சி விஷமருந்தி இறந்தார். இதனால் 1736-ம் ஆண்டு நாயக்கர்களின் ஆட்சி வீழ்ச்சியடைந்தது.

**தஞ்சை நாயக்கர்கள்:-**

- ❖ விஜய நகர பேரரசில் தஞ்சாவூரின் பொறுப்பாளராக திம்மப்ப நாயக்கர் செயல்பட்டார். இவருக்கு பின்னர் பொறுப்பேற்ற சேவப்ப நாயக்கர் தஞ்சாவூரில் நாயக்கர்களின் ஆட்சியை ஏற்படுத்தினார்.
- ❖ இவர் போர்த்துக்கீசியர்களுக்கு நாகப்பட்டினத்தில் குடியேற அனுமதி அளித்தார்.
- ❖ சிசுங்கா ஏரி எனப்படும் புதுப்பித்தார்.

**அச்சுதப்ப நாயக்கா**

- ❖ இவர் சேவப்ப நாயக்கரின் மகன். இவர் ஸ்ரீரங்கத்தில் ரெங்கநாதருக்கு வைர சிம்மாசனம் வழங்கினார்.
- ❖ திருவண்ணாமலை அருணாச்சலேஸ்வரர் கோவிலை கட்டினார்.

**ரகுநாத நாயக்கர்**

- ❖ இவர் அச்சுதப்ப நாயக்கரின் மகன்.
- ❖ ருக்மணி பரிநயம், பாரிஜாதம், புஷ்பகர்ணம், ராமாயணம் போன்ற **நூ**ல்களை தெலுங்கு மொழியில் எழுதினார்.

**விஜயராகவ நாயக்கர்**

- ❖ இவர் ரகுநாத நாயக்கரின் மகன்
- ❖ இவர் திறமையற்றதால் தஞ்சை நாயக்**கர் மரபின்** கடைசி அரசராக**க்** கருதப்படுகிறார்.
- ❖ மதுரை சொக்கநாத நாயக்கர் தஞ்சாவூரின் மீது படையெடுத்து தம் அரசுடன் இணைத்துக் கொண்டதால் 1673-ல் தஞ்சாவூர் நாயக்கர் ஆட்சி முடிவுற்றது.

**செஞ்சி நாயக்கர்கள்**

- ❖ பாலாற்றிற்கும், கொள்ளிடத்திற்கும் இடைப்பட்ட பகுதி செஞ்சி.



Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

- இவர்களின் பூர்வீகம் வட இந்தியாவில் உள்ள மணி நாகபுரம்.
- கிருஷ்ண தேவராயர் செஞ்சியின் பொறுப்பாளராக வையப்ப நாயக்கரை நியமித்தார். இவருக்கு பின்வந்த இரண்டாம் கிருஷ்ணப்ப நாயக்கர் செஞ்சியில் நாயக்கர் ஆட்சியை ஏற்படுத்தினார்.

**இரண்டாம் கிருஷ்ணப்ப நாயக்கர்**

- இவர் வெள்ளாற்றின் கரையில் கிருஷ்ணப் பட்டினம் என்ற நகரை ஏற்படுத்தினார்.
- சிதம்பரத்தில் கோவிந்தராஜர் சிலையை புதுப்பித்தார்.
- இவருடைய தளபதி வேங்கடா **என்பவர்** சென்னை சாகரம் என்ற ஏரியை தோற்றுவித்தார்.
- இவருக்கு பின் வந்தவர்கள் திறமையற்றதால் கி.பி.1648-ல் பீஜப்பூர் சுல்தானின் படைத்தளபதி சொரூப் சிங் கட்டுப்பாட்டில் செஞ்சி கொண்டுவரப்பட்டது.
- இவருக்கு பின்னர் மகன் ராஜா தேசிங்கு பொறுப்பேற்றார். இவர் ஆற்காட் நவாப் சாதுப் துல்லாகானால் தோற்கடிக்கப்பட்டுக் கொல்லப்பட்டார்.
- ராஜா தேசிங்கின் மனைவி சதி முறையில் இறந்ததால் அவர் நினைவாக ராணிப்பேட்டை நகரம் உருவாக்கப்பட்டது. செஞ்சியில் நாயக்கர் ஆட்சி முடிவுற்றது.

**நாயக்கர்களின் ஆட்சி முறை**

- இவர் ஆட்சிக்காலத்தில் பாளையப்பட்டு முறை கொண்டுவரப்பட்டது.
- வர்ணாசிரம முறையில் சமுதாய முறை காணப்பட்டது. ஜாதி முறை கடுமையாக பின்பற்றப்பட்டது.
- மதுரை நாயக்கர்கள் திருநெல்வேலியில் கிருஷ்ணாபுரம் கோவில், நெல்லையப்பர் கோவில், இராமேஸ்வரத்தில் ராமநாத சுவாமி கோவில், ஸ்ரீவில்லிபுத்தூர் கோபுரம் ஆகியவற்றை கட்டினர்.
- கிருஷ்ணப்ப நாயக்கர் மதுரையில் வடக்கு மண்டபம், ஆயிரங்கால் மண்டபம், மூர்த்தி அம்மன் மண்டபம், சூரிய மண்டபம், வீரப்ப மண்டபம் ஆகியவற்றை புதுப்பித்தார்.
- இவர் மீனாட்சி கோவிலை பொன்னாலான தகடை பதித்தார்.
- திருமலை நாயக்கர் மாரியம்மன் கோவில் தெப்பக்குளத்தை கட்டினார்.



Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

- நாயக்கர் மஹால் இத்தாலி சிற்பியின் மேற்பார்வையில் திராவிட இஸ்லாமிய ஐரோப்பிய கலை கொண்டு கட்டப்பட்டது.
- தஞ்சை நாயக்கரான சேவப்ப நாயக்கர் தஞ்சாவூரில் சிவகங்கை கோட்டையையும், அச்சுதப்ப நாயக்கர் திருவண்ணாமலையில் அருணாச்சலேஸ்வரர் கோவில் கோபுரத்தையும் கட்டினார்.
- செஞ்சி நாயக்கரான அச்சுத ராம பத்திர நாயக்கர், திருவண்ணாமலை சுற்று சுவரையும், பெரிய கோபுரத்தையும் திண்டிவனத்தில் விஷ்ணு கோவிலையும், வேங்கடப்ப நாயக்கர் திருவண்ணாமலை பெருங்கோபுரத்தையும் கட்டினார்.
- திருமலை நாயக்கரின் சிதம்பர புராணம், பரஞ்சோதியாரின் சிதம்பர பட்டியல், ஹரிதாசரின் இருசமய விளக்கம் உறுப்புலவரின் சீறாப்புராணம் குமரகுருபரின் கந்தர் கலிவெண்பா, திருவேங்கடம் எழுதிய மெய்ஞான விளக்கம் இவர் காலத்தின் சிறந்த நூல்களாகும்.

**தஞ்சையில் மராத்தியர்களின் ஆட்சி**

- மதுரையை ஆண்ட சொக்கநாத நாயக்கர் தஞ்சையை கைப்பற்றி அழகிரி என்பவரை ஆளுநராக நியமித்தார்.
- இவர்களிடையே ஏற்பட்ட கருத்து வேறுபட்டால் செங்கமலதாஸ் என்பவரை நாயக்கராக பீஜப்பூர் சுல்தானின் உதவியை நாடினார்.
- பீஜப்பூர் சுல்தான் வெங்கோஜி என்பவரை தஞ்சைக்கு அனுப்பி அதைக் கைப்பற்றினார்.
- இதனால் மராத்தியர்களின் ஆட்சி தஞ்சையில் ஏற்பட்டது.
- இவர்களுடைய காலம் கி.பி.1676-1856.

**வெங்கோஜி**

- இவர் ஷாஜி பான்ஸ்லே மற்றும் துக்காபாயின் மகன். இவர் எக்கோஜி என அழைக்கப்பட்டார். இவருடைய ஆட்சியில் சிவாஜி படையெடுத்து கொள்ளிடத்தைக் கைப்பற்றினார்.

**இரண்டாம் ஷாஜி**

- இவர் வெங்கோஜியின் இரண்டாம் மகன்.



Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

- ❖ இவருக்கு பிறகு 1763-ல் துல்ஜாஜி பொறுப்பேற்றார். இவர் காலத்தில் ராமநாதபுரம் தஞ்சை எல்லைத்தகராறு ஏற்பட்டது.

**இரண்டாம் சரபோஜி**

- ❖ இவர் துல்ஜாஜியின் தத்துப்பிள்ளையாவார். 1787-ல் பொறுப்பேற்றார்.
- ❖ இரவது பாதுகாவலர் அமீர் சிங்.
- ❖ அமீர் சிங் ஆங்கிலேயர்களின் உதவியுடன் சர்வாதிகார முறையில் ஆட்சிபுரிந்தார். இதனால் அமீர் சிங் நீக்கப்பட்டு இரண்டாம் சரபோஜி மீண்டும் அரசராக்கப்பட்டார்.
- ❖ இவருக்கு பிறகு 1799-ல் இவருடைய மகன் இரண்டாம் சிவாஜி பொறுப்பேற்றார். இவருக்கு வாரிசு இல்லாததால் 1856-ல் **தஞ்சை ஆங்கிலப்** பேரரசுடன் இணைக்கப்பட்டது.
- ❖ மராத்தியர் ஆட்சிக்காலத்தில் இராமபத்திர தீட்சிதர், பாஸ்கர தீட்சிதர் என்ற சமஸ்கிருத கவிஞர்கள் மற்றும் ஆந்திரக் காளிதாசர் என்று போற்றப்பட்ட அல்லூரிக் குப்பண்ணா ஆகியோர் புகழ்பெற்றிருந்தனர். இரண்டாம் சரபோஜியால் கட்டப்பட்ட சரஸ்வதி மஹாலும் (தென்னிந்தியாவின் மிகப்பெரிய நூலகம்) இவர்கள் காலத்தை சார்ந்ததாகும்.

Dept. of Employment



Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

Join Telegram Channel :

@tnpscfree

https://t.me/sasiclasses

